IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.11/2025

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | RANJITHKUMAR |
| FATHER'S NAME | : | SANKARAN |
| VILLAGE | : | KATPADI |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 17th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காட்பாடியில் வசித்து வருகிறேன். நான் BCA வரை படித்துள்ளேன். தனியார் துறையில் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவது கையொப்பம் எனனுடையது தான். அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பத்தை அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்ட வழக்கு சம்மந்தமாக 13.07.2024 ம் தேதி கண்டிப்பேடு கம்மவார் புதூர் என்ற இடத்தில் வைத்து செய்து கொடுத்தேன். என்னுடன் சசி என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் சம்பவ இடத்தில் மார்க் செய்து வைத்திருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவ இடம் செல்வதற்கு முன்பாக போலிசார் எவ்வள்வு மணி நேரம் இருந்தார்கள் என்று தெரியாது. நாங்கள் போவதற்கு முன்பாக நான்கைந்து நபர்கள் சம்பவ இடத்தில் போலிசாருடன் இருந்தார்கள். நான் கையெபப்பம்செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியும். என் பாட்டிக்கு விபத்து ஏற்பட்டது பற்றி என் தந்தை எனக்கு தகவல் சொன்னார் அவருக்கு யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. சொன்ன நேரம் தேதியில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றும், என் பாட்டிக்கு விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக காவல் நிலையம் செல்லும் போது கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு விபத்து ஏற்பட்டதால் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 17.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.